<u>**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**</u>

<u>**MCOP.NO.38/ 2020**</u>

Deposition of PW - 2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 25.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் திரு.ஜி.ராஜசேகரன் | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

<u>**முதல் விசாரணை**</u>

நான் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிகின்றேன். 24.02.2019-ம் தேதி இரவு 9 மணிக்கு சாலை விபத்தில் அடிபட்டு திரு.சதீஷ்குமார், வயது 24 என்ற நபர் அடிபட்டு வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு 25.02.2019-ம் தேதி அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) 3x0.5x0.5 cm அளவில் சிதைந்த காயம் வலது முன் பக்கவாட்டுத்தலைப்பகுதியில் காணப்பட்டது.
2) வலது காலில் 5x0.5x0.5 cm அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது.
3) 3x3.3x0.3 அளவுள்ள கிழிந்த காயம் வலது காது பகுதியில் காணப்பட்டது.
4) இடது பக்கவாட்டு மூளைப்பகுதியில் இரத்தகட்டு இருந்தது.
5) இடது பக்கவாட்டு மூளைப்பகுதியின் சவ்வு பகுதியில் இரத்த கட்டு இருந்தது.
6) முகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு முறிவுகள் காணப்பட்டன.
7) வலது தாடை எலும்பு முறிவு காணப்பட்டது.
8) வலது முன்னங்கை எலும்பு முறிவு காணப்பட்டது.

மேற்படி காயங்களில் காயங்கள் 1 மற்றும் 3 ஆகியவை சாதாரண காயங்கள் என்றும் மற்ற காயங்கள் கொடுங்காயங்கள் என்றும் நான் சான்று அளித்தேன். மேற்படி நபருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 04.04.2019 அன்று விடுவிக்கப்பட்டார். அதற்கான **விடுவிப்பு சான்று மற்றும் சிகிச்சை விவரக்குறிப்பு அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் ம.சா.ஆ.11** ஆகும். பின்னிட்டு 04.04.2019-ம் தேதியன்றே அனுமதிக்கப்பட்டு 08.04.2019-ம் தேதி விடுவிக்கப்பட்டார். அதற்கான **விடுவிப்பு சான்று மற்றும் சிகிச்சை விவரக்குறிப்பு அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் ம.சா.ஆ.12** ஆகும். மீண்டும் 08.07.2019-ம் தேதி அனுமதிக்கப்பட்டு 09.07.2019-ம் தேதி விடுவிக்கப்பட்டார். அதற்கான **விடுவிப்பு சான்று மற்றும் சிகிச்சை விவரக்குறிப்பு அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் ம.சா.ஆ.13** ஆகும். 07.08.2019-ம் தேதி அனுமதிக்கப்பட்டு 08.08.2019-ம் தேதி விடுவிக்கப்பட்டார். அதற்கான **விடுவிப்பு**

**சான்று மற்றும் சிகிச்சை விவரக்குறிப்பு அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் ம.சா.ஆ.14** ஆகும். மீண்டும் 15.05.2020–ம் தேதி அனுமதிக்கப்பட்டு 19.05.2020–ம் தேதி விடுவிக்கப்பட்டார். அதற்கான **விடுவிப்பு சான்று மற்றும் சிகிச்சை விவரக்குறிப்பு அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் ம.சா.ஆ.15** ஆகும். மேற்படி சதீஷ்குமார் என்பவர் பின்னிட்டு இறந்துவிட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்களால் அவர் இறந்திருக்க வாய்ப்பு உள்ளது. **சதீஷ்குமார் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.16** ஆகும். எங்கள் மருத்துவமனையில் **சதீஷ்குமார் என்பவருக்கு சிகிச்சையில் வழங்கப்பட்ட பில்கள் ரூ.6,35,379/– அசல் ம.சா.ஆ.17** ஆகும்.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |